05.02.2025 Mcop 318 of 2023 c/w 320 of 2023 . .ம.சா1 மேனகா

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் வயது, வருமானம்,வேலையை குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் சாலை விதிகளை மதித்து வாகனத்தை ஒட்டினார் என்றாலும், என் கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சாலையில் வைத்து நடந்தது என்றால் சரிதான். விபத்திற்கு என் கணவர் காரணம் என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் குற்ற வழக்கின் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு விபத்து சமயம் இருசக்கர வாகனம் ஒட்டுவதற்கான ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் ஒட்டுனர் உரிமம் இல்லாமல் விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் 2ம்எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றாலும் அதுவும் குணமாகிவிட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் எனக்கு நிரந்தர ஊனம் மற்றும் வருமான இழப்பு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் அவர் மீது போடப்பட்ட குற்ற வழக்கை அவர் நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் நிற்க மற்றும் நடக்க முடியவில்லை என நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் எனக்கு மருத்துவ செலவு என்ற தலைப்பின் கீழ் எதுவும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ளஇழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.